## கழக அரசின் சாதனைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்

# வயிற்றெரிச்சலில் அவதூறுகளைப் பரப்புகிறார் பழனிசாமி!

கடந்த 2021ஆம் ஆண்டு அ.தி.மு.க. எனும் இருண்டகால ஆட்சியைச் சட்டம்-ஒழுங்கைச் சீர்குலைத்த ஆட்சியை தொழில் வளர்ச்சியைப் பாழ்படுத்திய ஆட்சியை தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைப் பின்னுக்குத் தள்ளிய ஆட்சியை அகற்றி, என் மேல் நம்பிக்கை வைத்து, என்னிடம் கொடுத்தீர்கள்! ஆட்சிப் பொறுப்பேற்ற நம்முடைய திராவிட மாடல் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி, இந்தியாவில் இருக்கும் மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாக இருக்கிறது! வாக்களித்தவர்கள்... வாக்களிக்காதவர்கள்... என்ற பாரபட்சம் பார்க்காமல் அனைவருக்கும், பொதுவான அரசாக ஆட்சி நடத்தி வருகிறோம்...

அதனால்தான் நான் செல்லும் இடமெல்லாம், மக்கள் "நற்சாட்சிப் பத்திரம்" வழங்குவதைப்போல் அலை அலையாய் மாநாட்டிற்கு வருவதுபோல், வருகிறார்கள்! தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு திட்டத்தில் பயன் கிடைப்பது மாதிரியான நல்லாட்சியை வழங்கி வருகிறோம்!

உங்களுக்குத் தெரியும், நான் ஆய்வுகளுக்கு அடிக்கடி தமிழ்நாடு முழுவதும் பயணம் செல்பவன். அப்படியொரு ஆய்வில், சேலத்தில் பொதுமக்கள் சிலரைச் சந்தித்து, "நம்முடைய அரசின் திட்டங்கள் எப்படி செயல்படுகிறது? ஏதாவது குறை இருக்கிறதா? இல்லை, அந்தத் திட்டங்களைச் செம்மைப்படுத்த ஏதாவது கருத்துகள் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

**அதில் ஒரு மகளிர் சொன்ன கருத்தை என்னால் மறக்க முடியாது. மிகவும் எதார்த்தமாக அவர்கள் சொன்னார்கள்! "அய்யா என்னுடைய கணவர் பெயிண்டராக வேலை செய்கிறார்! எங்களுக்கு ஒரு பெண் குழந்தை இருக்கிறது! என்னுடைய கணவருக்கு பெயிண்டிங் வேலை தொடர்ந்து இருக்காது. சம்பாதிக்கும் காசு வீட்டுச் செலவிற்கே சரியாகப் போய்விடும். நானும் வீட்டு வேலைக்குச் செல்கிறேன்! மூன்றாவது படிக்கும் என் குழந்தைக்குக் காலையில் சாப்பாடு கொடுக்க முடியவில்லை என்று, வேலை செய்யும்போது கஷ்டமாக இருக்கும்! இப்போது அந்தக் கஷ்டம் இல்லை, நீங்கள் கொண்டுவந்த காலை உணவுத் திட்டத்தால், காலையில் என் குழந்தை பள்ளிக்குச் சென்று நன்கு சுவையாகச் சாப்பிடுகிறாள்!**

**அதுமட்டுமல்ல, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் நீங்கள் கொடுக்கும் ஆயிரம் ரூபாய் பெரிய உதவி! எங்கள் செலவு போக மீதியை என் பெண் குழந்தை பெயரில், பக்கத்தில் இருந்த அஞ்சல் அலுவலகத்தில் கணக்கு தொடங்கி, சேமிக்கத் தொடங்கிவிட்டேன்! மற்றவர்களுக்கு அது வெறும் ஆயிரம் ரூபாயாக இருக்கலாம்... ஆனால் எனக்கு, என் குழந்தையின் எதிர்காலத்திற்கான பணம்! என் குழந்தைக்குச் சாப்பாடும் போட்டு, பணமும் கொடுக்கும் நீங்கள் நன்றாக இருக்க வேண்டும்" என்று அந்தத் தாய்மார் மனதிலிருந்து வந்த வார்த்தை... இது போதாதா நமக்கு? இதைவிட என்ன மகிழ்ச்சி வேண்டும். இது போன்று, தமிழ்நாடு முழுவதும் இருக்கும் 1 கோடியே 15 இலட்சம் மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலமாக வாங்கும் ஆயிரம் ரூபாயை, "எங்கள் அண்ணன் ஸ்டாலின் தரும் தாய்வீட்டுச் சீர்" என்று உரிமையோடும், மகிழ்ச்சியோடும் சொல்கிறார்கள்!**

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் போன்று, மகளிர் இலவசமாகப் பயணம் செய்ய விடியல் பயணம் திட்டம்,**



**கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம்,**

**மாணவர்களுக்கும் 1000 ரூபாய் வழங்க இருக்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம்,**

**இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நான் முதல்வன் திட்டம் என்று நாள்தோறும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி, மக்களுக்கான அரசாகத் தி.மு.க. ஆட்சி செயல்பட்டு வருகிறது!**

தமிழ்நாட்டில் தொழில்வளர்ச்சியைப் பெருக்கவேண்டும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்று முழு முயற்சியோடு செயல்பட்டு வருகிறது நம்முடைய திராவிட மாடல் அரசு! ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழிற்சாலைகள் அமைய வேண்டும். வளர்ச்சி என்பது சீரானதாக அனைத்து மாவட்டங்களுக்கும் இருக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க. அரசின் நோக்கம்!

நமக்கு மிகப்பெரிய இலக்கு இருக்கிறது. ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரத்தை தமிழ்நாடு எட்ட வேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்ட இலக்கு! அந்த இலக்கை அடைய முதலீடுகளைப் பெற – புதிய தொழிற்சாலைகளை அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டிருக்கிறோம்!

## பா.ஜ.க.வின் கையில் பழனிசாமியின் ஊழல் குடுமி!

## ஒருபோதும் பா.ஜ.க.வை பழனிசாமியால் விமர்சிக்க முடியாது!

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, 6 இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான முதலீடுகளைப் பெற்று 14 இலட்சத்து 54 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 631 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டிருக்கிறோம்!

தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல ஒவ்வொரு திட்டமாக வடிவமைத்துச் செயல்படுத்தி வருகிறோம்! இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் மக்கள் நலத்திட்டங்களைத் தமிழ்நாட்டுக்கான திட்டங்களைக் குறை சொல்கிறார்கள். அது குறைகளாக இருந்தால் நிச்சயம் சரிசெய்யலாம்... ஆனால், தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லது நடக்கிறது என்ற வயிற்றெரிச்சலில் அவதூறு செய்கிறார்கள். தி.மு.க. திட்டங்களைக் குறை சொல்வதாக நினைத்துக் கொண்டு பயனடையும் தமிழ்நாட்டு மக்களையே குறை சொல்கிறார் பாதம்தாங்கி பழனிசாமி! அவர் மட்டுமா, பா.ஜ.க. என்ன சொல்கிறார்கள்? மகளிருக்குக் கிடைக்கும் உரிமைத் தொகையையும் – வெள்ள நிவாரணத் தொகையையும் – 'பிச்சை' என்று கேவலப்படுத்தியும் தமிழ்நாட்டுத் திட்டங்களுக்கு நிதி தராமலும் முட்டுக்கட்டை போடும் கட்சி பா.ஜ.க.

தி.மு.க. அரசின் சாதனைகளைக் குறை சொல்லும் இந்த அ.தி.மு.க. – பா.ஜ.க. கள்ளக்கூட்டணியால், அவர்கள் ஆட்சியில் செய்த சாதனை என்றோ மக்களுக்காக நிறைவேற்றிய சிறப்பு திட்டம் என்றோ – எதையும் சொல்வதற்குத் தகுதி இல்லாமல், அவதூறு குதிரையில் அரசியல் பயணம் செய்கிறார்கள்! ஆனால், தி.மு.க.வைப் பொறுத்தவரைக்கும், சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் – நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் – தேர்தல் அறிக்கையில் சொல்வதைச் செய்யும் கட்சி!

சென்வாட் வரியை நீக்குவோம் என்று வாக்குறுதி கொடுத்தோம். நீக்கிக் காட்டினோம்!

பொடா சட்டத்தை ரத்து செய்வோம் என்று கூறினோம். இரத்து செய்தோம்!

விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றம்!

அதுமட்டுமல்ல, இந்த வட்டாரத்து விவசாய மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளாக இருந்த முக்கியமான பிரச்சினைகளைத் தி.மு.க. அரசு தீர்த்து வைத்திருக்கிறது என்றப் பெருமையுடன் சொல்ல முடியும்!

காலிங்கராயன் வாய்க்காலில் சாயக் கழிவுநீர் கலப்பதை நம்முடைய தி.மு.க. அரசு தடுத்திருக்கிறது! காலிங்கராயன் என்ற கொங்கு நாட்டுத் தலைவரால் 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதுதான் காலிங்கராயன் அணை! அதோடு வாய்க்காலும் அமைத்தார். இயந்திரங்கள் இல்லாத நிலையில் பூமியின் சரிவைக் கணக்கிட்டு பவானி முதல் கொடுமுடி வரையிலான 56 கிலோ மீட்டர் தூரத்திற்கு வளைந்து, வளைந்துச் சென்றால், தண்ணீரின் வேகம் அதிகரித்து கடைமடை வரை சீரான பாசனம் வழங்க முடியும் என்று காலிங்கராயன் வாய்க்கால் வெட்டி 21 ஆயிரம் ஏக்கரில் பாசனத்தைத் துவக்கி வைத்தார். அதுமட்டுமா, இது பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கட்டியது என்பதற்காகவே இதைத் துளிகூட, தான் பயன்படுத்தாமல், வேறொரு பகுதிக்குச் சென்று குடியேறிய மாபெரும் தலைவர்தான் காலிங்கராயர் அவர்கள்.

இன்று வரை இலட்சக்கணக்கான மக்களுக்குக் காலிங்கராயன் தண்ணீர் பயன்பட்டு வருகிறது. காலப்போக்கில் சாயப்பட்டறைகள், தோல் ஆலைகளால் இந்த வாய்க்கால் நீர் அழுக்கானது. இதனால், உழவர் பெருமக்கள் கவலை அடைந்தார்கள். இந்தப் பிரச்சினை பற்றி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு சாய, தோல் ஆலைகள் பெருந்துறை சிப்காட் தொழில் வளாகத்திற்கு மாற்றப்பட்டது.

மேலும், இதுபோன்ற பிரச்சினை ஏற்படக் கூடாது என்று, 1996ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 100 கோடி ரூபாய் செலவில் காலிங்கராயன் வாய்க்கால் வலது கரைப்பகுதி தரைத்தளம் அமைத்து வாகனங்கள் சென்று வரும் வகையில் வடிவமைக்கப்பட்டது. இதனால், கால்வாயின் வலது கரைப் பகுதியில் இருக்கும் ஆலைகள் கழிவுநீரை வெளியேற்ற முடியாமல், தடுத்து நிறுத்தப்பட்டது. இப்போது, தெளிவான நீர்ப் பாசனம் பெற்று வருகிறது. தண்ணீர் வருகைக்கு ஏற்ப மூன்று போகம் சாகுபடி செய்கிறார்கள்.

### விவசாயிகளின் அச்சம் போக்கப்பட்டுள்ளது!

அதேபோன்றுதான், ஈரோடு பவானிசாகர் அணை, கீழ்ப்பவானி வாய்க்கால் பாசனத் திட்டப் பிரச்சினையும் தீர்க்கப்பட்டிருக்கிறது. பவானிசாகர் அணையில் இருந்து ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டப் பகுதிகளுக்குக் கீழ் பவானி பாசனக் கால்வாய்த் திட்டம் மூலம் தண்ணீர் போகிறது. இந்தக் கால்வாய் பவானிசாகர், சத்தியமங்கலம், கோபி, பெருந்துறை, சென்னிமலை, மங்களப்பட்டி வரை சுமார் 200 கிலோமீட்டர் பாய்வதால், 3 இலட்சம் ஏக்கரில் நேரடிப் பாசனமும், 5 இலட்சம் ஏக்கரில் கசிவுநீர்ப் பாசனமும் பெறுகிறது. இந்தக் கால்வாய் பாசனத்திற்குத் திறக்கப்படும்போதெல்லாம், 200ஆவது கிலோ மீட்டரில் இருக்கும் கடைமடைப் பகுதியான மங்களப்பட்டிக்குத் தண்ணீர் சென்று சேருவது இல்லை என்று விவசாயிகள் பல ஆண்டுகளாகப் போராடி வந்தார்கள்.

கடந்த 2020ஆம் ஆண்டு கீழ்பவானி வாய்க்கால் முழுவதும், 719 கோடி செலவில் கான்கிரீட் தளம் அமைக்கப்படும் என்று கடந்த அரசு அறிவித்தது. இதனால், விவசாயிகள் கொதித்து எழுந்தார்கள். கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் வரவில்லை என்று கேட்டதற்கு கால்வாய் முழுவதும் கான்கிரீட் போட்டால், கசிவுநீர்ப் பாசனம் வறண்டு போய்விடும், குடிநீர் ஆழ்துளைக் கிணறுகள் வற்றிப் போய்விடும், இலட்சக்கணக்கான மரங்கள் காய்ந்து போய்விடும் என்று கான்கிரீட் திட்டத்தைக் கைவிடக் கோரி விவசாயிகள் தொடர் போராட்டம் நடத்தி வந்தார்கள். 2021இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு கீழ்பவானி வாய்க்கால் பாசன விவசாயிகளிடம் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தினோம். பல முறை ஆய்வுக் கூட்டம் நடத்தி விவசாயிகளுக்குத் தேவையானவை மட்டும் செய்யப்படும் என்று, நான் உறுதி அளித்தேன். தற்போது முதற்கட்டமாக, சுமார் 69 ஆண்டுகள் ஆகிவிட்டதால், வலுவிழந்த, உடைந்த, பாசன மதகுகள், பக்கவாட்டுச் சுவர்கள், பெருச்சாளிகள் வளைகள் தோண்டி உடைப்பு ஏற்பட உள்ள இடங்கள் ஆகியவற்றை கணக்கெடுப்பு செய்து, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் விவசாயிகள் அச்சம் போக்கப்பட்டு மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள்.

### அத்திடக்கடவு அவினாசி நீரேற்றுத் திட்டம்!

அடுத்து, மற்றொரு திட்டப் பிரச்சினையும் தீர்த்து வைத்திருக்கிறோம்! அதுதான், அ.தி.மு.க. ஆட்சியில் முறையான திட்டமிடல் இல்லாமல், அவசரகதியில் துவக்கப்பட்ட அத்திக்கடவு – அவினாசி நீரேற்றுத் திட்டம். தண்ணீர் எடுக்கும் நிலையம் இருக்கும் பகுதியைக் கையகப்படுத்தாமல், கடந்த ஆட்சியில் விட்டுவிட்டார்கள்! இதனால், ஒட்டு மொத்தத் திட்டத்தையே நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. பிறகு, நம்முடைய அமைச்சர் முத்துசாமி அவர்கள், நிலம் வைத்திருக்கும் விவசாயிகளிடம் சுமுகமாகப் பேசி நிலத்தைக் கையகப்படுத்தினார். குழாய்கள் பதிக்கப்பட்டுச் சோதனை ஓட்டம் முடிக்கப்பட்டு, இப்போது தயார் நிலையில் இருக்கிறது. வரும் பருவகாலத்தில் உபரிநீர் வந்தவுடன், இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வரும். திட்டம் போடும்போது அ.தி.மு.க. அரசு தீவிரமாக யோசிப்பது இல்லை என்பதற்கு, இதுவும் ஒரு முக்கியமான உதாரணம்!

நம்மைப் பொறுத்தவரை, நம்முடைய முழக்கமே என்ன? "சொன்னதைச் செய்வோம்! செய்வதைச் சொல்வோம்"! அந்த கம்பீரத்துடன்தான், இந்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குப் பின், என்னவெல்லாம் செய்வோம் என்று தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாகக் கொடுத்திருக்கிறோம். சாதனைகளாக மாறப்போகும் அந்த வாக்குறுதிகளில் சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்...

பத்தாண்டுகளாக சாமானிய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்று சிறிதும் நினைத்துப் பார்க்காமல், மக்கள் விரோத பா.ஜ.க. அரசால் தொடர்ந்து உயர்த்தப்பட்ட பெட்ரோல், டீசல், கேஸ் விலை குறைக்கப்படும்!

சிறுபான்மையின மக்களுக்கு எதிரான சட்டங்கள் ரத்து செய்யப்படும்!

தொழிலாளர் விரோதச் சட்டங்கள், மறுசீரமைப்பு செய்யப்படும்!

ஜி.எஸ்.டி. சட்டத்தில் சீர்திருத்தம் செய்யப்படும்!

விவசாயிகள் கூட்டுறவு அமைப்புகளிலும் வங்கிகளிலும் வாங்கியிருக்கும் கடனும் – வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்!

உழவர்களின் வேளாண் விளைபொருட்களுக்கு மொத்த உற்பத்திச் செலவுடன், ஐம்பது விழுக்காடு என்பதை வலியுறுத்திக் குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்யப்படும்!

தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச் சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும்!

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் வேலை நாட்கள் 100இல் இருந்து, 150 நாட்களாவும், ஊதியம் 400 ரூபாயாகவும் உயர்த்தப்படும்!

மாணவர்களின் கல்விக் கடன் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும்!

வங்கிகளில் மினிமம் பேலன்ஸ் இல்லாதபோது விதிக்கப்படும் அபராதம் நீக்கப்படும்!

ஈரோடு மாவட்டம் பாசூரையும், நாமக்கல் மாவட்ட சோழிராமணியையும் இணைக்க இரயில்வே மேம்பாலம்!

நாமக்கல்லில் சிறப்பு முட்டை ஏற்றுமதி மையம்!

ஈரோடு இரயில் நிலையம் முதல் காங்கேயம், தாராபுரம், பழனி இரயில் நிலையம் வரை புதிய அகல ரயில் பாதைத் திட்டம்!

ஈரோட்டில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும்!

இப்படி நம்முடைய திராவிட மாடல் ஆட்சி போன்று, இந்திய ஒன்றியத்திலும் எல்லாருக்கும் எல்லாம் எனும் ஆட்சி அமைய வேண்டும் என்று இந்த வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம்!

**கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை**

ஈரோடு, சின்னியம்பாளையம்.
31.3.2024

---

## நாடாளுமன்றத் தேர்தல் – கழகத் தலைவர்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றைய பிரச்சாரம்!



2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 'இந்தியா' கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரித்து வருகிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் இன்றைய தேர்தல் பிரச்சாரப் பயண விவரம் :-


| தேதி | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|
| 02.04.2024 (செவ்வாய்க்கிழமை) - | வேலூர் |
| | அரக்கோணம் |

---

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (11)

## ஏப்ரல் 3 புதன்கிழமை அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜீன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, ஏப்ரல் 3 புதன்கிழமை அன்று முரசொலி சிறப்பிதழ், "பாசறையில் தொகுத்த முத்துக்கள்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளி வருகிறது.**

**- ஆசிரியர்**